## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கமைய நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேசிய சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் பெறுவனவுகளுக்கும் கொடுப்பனவுகளுக்குமாக வேறான ஓர் நிதியக் கணக்கொன்று பேணப்பட்டிராததுடன் அதிகாரசபையின் நிதிச் செயலாற்றற்கூற்றின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) அதிகாரசபையால் 2011 ஆம் ஆண்டின் போது பெறப்பட்ட ரூபா 17,450,000 பெறுமதியான இரு மோட்டார் வாகனங்கள் 2011 ஆம் ஆண்டின் போது கணக்கீடு செய்யப்படாது 2012 ஆம் ஆண்டின் போது கணக்கிற்கும் கொண்டுவரப்பட்டிருந்தது. 2011 ஆம் ஆண்டின் போது மோட்டார் வாகனங்களிற்குரிய வருடாந்த பெறுமானத்தேய்வு ரூபா 1,745,000 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் திரண்ட பெறுமானத்தேய்வு ஒதுக்கம் அதே தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது ஊழியர் பணிக்கொடையாக ரூபா 50,025 தொகை உத்தியோகத்தருக்குச் செலுத்தப்பட்டிருந்ததுடன் இது ஊழியர் பணிக்கொடை முதலீடுகளிலிருந்து காசேட்டிற்கு மாற்றப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இரு செயற்திட்டத்தின் கீழ் நிலவிய ரூபா 2,510,672 கூட்டுத்தொகையான சொத்துக்கள் 100 சதவீதத்தால் பெறுமானத் தேய்விடப்பட்டிருந்த போதிலும் அச் சொத்துக்கள் பயன்பாட்டில் உள்ளமையால் மீள்பெறுமதியிடப்பட்டு கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (i) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(1) ஆம் பிரிவு | 2009, 2010 ஆம் 2011 ஆண்டிற்காக வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| | நி.பி. 371 | அதிகாரசபை உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்ட முற்பணத்தொகையில் ரூபா 4,292,914 தொகை 2012 திசெம்பர் 31 வரையும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது ரூபா 20,000 தொகையான எல்லை விஞ்சி ரூபா 226,000 வரை முற்பணங்கள் பெறப்பட்ட 109 சந்தர்ப்பங்கள் |

| | |
|---|---|
| | அவதானிக்கப்பட்டன. மாவட்டச் செயலகத்தினூடாக எஞ்சிய தொகையைத் தீர்ப்பதற்கு நீண்ட காலம் கடப்பதாக தலைவியால் 2013 ஒக்டோபர் 29 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. |
| நி.பி. 1646 | அதிகாரசபைக்குரிய 19 வாகனங்கள் தொடர்பாக வாகன சம்பவக் குறிப்பேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1. நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான அதிகாரசபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் விளைவு ரூபா 11,428,602 தொகையான பற்றாக்குறையானதுடன் இதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 6,826,677 ஆகக் காணப்பட்டமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போதான நிதிவிளைவில் ரூபா 18,255,279 தொகையான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. தேசிய திட்டமிடல் மற்றும் அமுலாக்கலுக்காக பொதுத் திறைசேரியின் 2012 ஆம் ஆண்டிற்காக பெறப்பட்டிருந்த ஏற்பாடு ரூபா 4,810,000 ஆல் குறைவடைதல், ஏனைய முகவர் நிறுவகங்களிலிருந்தான பெறுவனவுகள் ரூபா 9,794,019 ஆல் குறைவடைதல் மற்றும் தனியாள் ஊதியங்களின் கொடுப்பனவுகள் ரூபா 7,093,319 ஆல் அதிகரித்தமையும் இவ் வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாகியிருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2012 ஆம் ஆண்டிற்காக தேறிய சொத்துக்களின் பெறுமதி ரூபா 112,277,411 ஆகக் காணப்பட்டதுடன் இது முன்னைய ஆண்டின் தேறிய சொத்துக்கள் ரூபா 84,321,565 ஆகவும் ஒப்பிடப்படுகையில் ரூபா 27,955,846 அதாவது 24 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டின் தொழிற்படு மூலதனம் ரூபா 15,548,563 ஆகக் காணப்பட்டதுடன் இது முன்னைய ஆண்டின் தொழிற்படு மூலதனம் ரூபா

12,608,539 உடன் ஒப்பிடுகையில் ரூபா 2,940,024 அதாவது 23 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

**3.1.1** மீளாய்வாண்டின் போது அதிகாரசபைக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளும் அவற்றை ஒழுங்குபடுத்தும் செயலாற்றலும் பின்வருமாறுள்ளன.

(அ) மீளாய்வாண்டின் போது அதிகாரசபையின் சட்டப் பிரிவிற்குக் கிடைக்கப்பெற்ற 2549 முறைப்பாடுகளில் 76 முறைப்பாடுகள் மாத்திரமே ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டிருந்ததுடன் 2473 முறைப்பாடுகள் ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகள் செயற்பாட்டில் உள்ளன.

(ஆ) அதிகாரசபையின் பொலிஸ் பிரிவிற்கு மீளாய்வாண்டின் போது 4010 முறைப்பாடுகள் பெறப்பட்டிருந்ததுடன் 34 முறைப்பாடுகள் மாத்திரமே விசாரணைகள் பூர்த்திசெய்யப்பட்டிருந்தன. ஏனைய பொலிஸ் நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை 3976 ஆகக் காணப்பட்டதுடன் இப் பொலிஸ் நிலையங்களிலிருந்து பதில் கிடைக்கப்பெற்றிராத எண்ணிக்கை 635 ஆகக் காணப்பட்டன.

(இ) மனநிலை சமூகப் பிரிவிற்கு கிடைக்கப்பெற்ற 1405 முறைப்பாடுகளில் 278 முறைப்பாடுகளுக்கு மாத்திரமே ஆலோசனை வழங்கல் சேவைகள் வழங்கப்பட்டு பூர்த்திசெய்யப்பட்டிருந்தது.

**3.1.2** மீளாய்வாண்டிற்காக அதிகாரசபையின் செயற்பாட்டுத்திட்டத்தின் பிரகாரம் 14 நிகழ்ச்சித்திட்டங்கள்/ செயற்திட்டங்கள் திட்டமிடப்பட்டிருந்ததுடன் இலக்கை அடைவதற்கான முன்னேற்றம் பின்வருமாறு இருந்தது.

(அ) பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்கள் நிதிரீதியாக திட்டமிடப்பட்டிருந்த போதிலும் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் அளவைத்

தீர்மானித்திருக்கவில்லை. ஆச் செயற்பாடுகளின் முன்னேற்றம் பின்வருமாறாகும்.

(i) சுனாமி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ரூபா 228,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 337,000 செலவிடப்பட்டு 08 கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன.

(ii) சிறுவர் பாதுகாப்பு உபகரணக் கொள்வனவிற்காக ரூபா 910,000 செலவிடப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் இதற்காக ரூபா 581,000 செலவிடப்பட்டிருந்தது.

(iii) சிறுவர் தின/ மகளிர் தினங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படுவதற்காக ரூபா 1,638,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 1,738,000 செலவில் 49 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன.

(ஆ) வீடியோ படமெடுத்தல் பிரிவை நாளதுவரையாக்கப்படுவதற்காக ரூபா 455,000 ஒதுக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 216,000 செலவில் அந் நிகழ்ச்சித்திட்டத்திற்காக 02 செயலமர்வுகள் நடாத்தப்படுவதற்கும் உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கும் செலவு செய்யப்பட்டிருந்தது.

**3.2 முகாமைத்துவ திறமையீனங்கள்**

அநுராதபுர மாவட்டத்தின் ‘‘சுரெகி பியச‘‘ சிறுவர் நிலையமொன்றை ஸ்தாபிப்பதற்காக ஓர் காணியைத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்ததுடன் அவற்றைக் கையேற்காது எல்லை வேலிகள் நிர்மாணிக்கப்படுவதற்காக ரூபா 258,018 தொகை மதவாச்சி பிரதேசச் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. காணிப் பிரச்சனைகள் காரணமாக உரிய செயற்பாட்டிற்காக இதனைப் பயன்படுத்த முடியாத போதிலும் வேலியைத் தயாரிப்பதற்கு செலவழிக்கப்பட்ட தொகையைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

**3.3 நிதிகளின் குறைவான பயன்பாடு**

அதிகாரசபையின் எல்லைச் சுவர் நிர்மாணிப்பதற்காக கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்திற்கு 2011 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்த ரூபா

2,222,000 தொகை அந் நிறுவகத்திடமிருந்து மீளப் பெற்றுக்கொள்ளப்பட்டு சிறுவர் பாதுகாப்பு நிதியக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது.

**3.4 போதியளவில் மேற்கொள்ளப்பட்டிராத நோக்கங்கள்**

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 14 ஆம் பிரிவில் காண்பிக்கப்பட்ட நோக்கங்களுக்கு இணங்க சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுப்பதற்கான தேசியக் கொள்கைகளை வகுத்தல் 03 மாதங்களுக்குள் பூர்த்தி செய்யப்படுவதற்கு 2009 சனவரி 06 ஆம் திகதி நடாத்தப்பட்ட பொது முயற்சிகள் குழுக் கூட்டத்தில் அதிகாரசபைக்குக் கட்டளையிடப்பட்டிருந்தது. ‘‘சிறுவர்களுக்கு எதிரான சகல வகையிலான துஷ்பிரயோகங்கள், வன்முறைகள் மற்றும் சுரண்டல்களிலிருந்து சிறுவர்களைப் பாதுகாப்பதற்கான தேசியக் கொள்கை எனும் தேசியக் கொள்கையொன்றை வகுத்து அமைச்சரவைக்கு 2012 திசெம்பர் 31 இல் வரையும் சமர்ப்பித்திருக்கவில்லை.

**4. கணக்களி பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 கூட்டிணைந்த திட்டம்**

அதிகாரசபையின் செயற்பாடுகள் தொடர்பாக 2007 – 2012 ஆம் ஆண்டு வரை கூட்டிணைந்த திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருந்தது. 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டத்தில் உள்ள ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்டத்தின் நலனை அடைந்துகொள்ளும் இலக்கிற்காக குறித்த காலப்பகுதி இனங்காணப்பட்டிருக்கவில்லை.

**4.2 செயல்நடவடிக்கைத் திட்டம்**

கூட்டிணைந்த திட்டத்தில் குறிப்பிடப்பட்ட எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை எய்துவதற்காக குறித்த காலப்பகுதி இனங்காணப்பட்டிராமையால் அதன் முன்னேற்றத்தை காலரீதியாக பரீட்சிக்க முடியாதிருந்தது.

## 4.3 கணக்காய்வுக் குழு

அதிகாரசபையால் 2012 ஆம் ஆண்டிற்காக 02 கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபைத் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) முற்பணக் கொடுப்பனவுகள்

(இ) காணிகள் கையேற்றல்